## வட பகுதியில் முதலிடம் - குடும்பச் சண்டைகளுக்கு

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 10
போன் 389 இதழ் 44
National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கிலமங்க பங்குனி 12 ஜுல்ஹஜ் 25 திங்கட்கிழமை (25-3-68)

## பொலிஸ் நிலைய புகார்கள் தெரிவிக்கின்றன

யாழ்ப்பாணம், திங்கள் வடபகுதி பொலிஸ் நிலையங்களில் செய்யப்படும் புகார்களில் அதிகமானவையும் குடும்பச் சண்டைகளாகவே உள்ளன வென்பது புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

அண்மையில் இங்குள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் பரிசோதனைக்குச் சென்றபோதே இத்தகவல்கள் தெரியவந்தன. தென்மராட்சியிலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்தில் மட்டும் கடந்த வருடம் 500க்கும் மேற்பட்ட குடும்பத் தகராறுகள் புகார் செய்யப்பட்டுள்ளனவாம்.

இவற்றில் அதிக மானவவையும் கணவன் மனைவிப் பூசல்களே என்றும் இவற்றைப் பொலிஸ் நிலையம்வரை கொண்டுவராமல் விடபொலிஸ் பொது மக்கள் நல்லுறவுக் குழு இந்த ஆண்டில் துரிதமாகச் செயல் படுத்தப்பட்டு வருவதாகவும் இங்குள்ள உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கா. நி)

### கச்சதீவு பெருநாள்

# கடைசி நேரத்தில் இரு கோஷ்டிகள் மோதல்

## படகில் ஏறிய ஒருவர் சந்தேகத்தில் கைது

## இம்முறை 10 ஆயிரம் யாத்திரீகர்கள் வந்தனர்

— நமது சிறப்பு நிருபர் —

கச்சதீவு, ஞாயிறு

கச்சதீவுப் பெருநாள் முடிவுற்ற கடைசி நேரத்தில் இரு கோஷ்டிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டது. படகில் ஏறிய ஒருவர் கள்ளக்குடியேற்றக்காரர் என்று கைதுசெய்யப்பட்டார்,

கச்சதீவு அர்ச். அந்தோனியார் திருவிழாவில் சுமார் 10,000 யாத்திரிகர்கள் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டில் குறிப்பாக இராமநாதபுரம் பகுதியிலிருந்து சுமார் 5000 பேரும், இலங்கையிலிருந்து 5000 பேரும் இங்கு வந்தனர்.

இன்றுடன் பெருநாள் முடிவுற்றதால் இன்று மாலை 4 மணிக்கு முன் இலங்கை யாத்திரிகர்கள் படகுகளில் ஏறிவிட வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததால் எல்லாப் படகுகளும் 4 மணிக்கு முன் கிளம்பிவிட்டன.

படகில் வைத்து ஒருவரைச் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்று பொலிஸார் கைதுசெய்தனர்.

இலங்கைப் பொலிஸ் அதிகாரிகளும், ராணுவ அதிகாரிகளும், துப்பறியும் பொலிஸாரும் கச்சதீவில் காணப்பட்டனர். ஆனால் அவர்கள் அனைவரும் சாதாரண உடையிலேயே காணப்பட்டனர்.

இந்தியாவிலிருந்து வந்திருந்த சலன படப் பிரிவினர் பெருநாள் நிகழ்ச்சிகளைப் படமெடுத்தனர்.

கடைசி நேரத்தில் இந்தியாவிலிருந்து வந்திருந்த ஒரு கோஷ்டிக்கும், இலங்கைக் கோஷ்டிக்குமிடையில் ஒரு மோதல் ஏற்பட்டது. ஆனால் எவரும் காயமடைந்ததாகத் தெரியவில்லை.

கடந்த வருடங்களிலும் பார்க்க இம்முறை அதிகமான யாத்திரிகர்கள் கலந்துகொண்டனர். திருவிழா

(6-ம் பக்கம் பார்க்க)

## ரயிலில் பொலிஸ் வேட்டை

## விலையுயர்ந்த சேலைகள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், திங்கள் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட யாழ்தேவியை யாழ்ப்பாணப்பொலிசார் நாவற்குழியில் வைத்து திடீர் பரிசோதனை செய்தபோது சுமார் நாலாயிரம் பெறுமதியான விலையுயர்ந்த சேலைகள் கொண்ட பச்சை நிற சூட்கேஸ் ஒன்று மூன்றும் வகுப்புப் பெட்டியின் ஆசனமொன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டதாம்.

இதை உரிமை கொண்டாட எவரும் முன்வராததால் பொலிசார் இதனைக் கைப்பற்றி யாழ்ப்பாணம் சுங்க உதவி கலெக்டரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## தனிக்கட்சி உருவாக்க ஆர். ஜீ. முயற்சி?

கொழும்பு, ஞாயிறு தம்பதேனியா எம். பி. யும் சுதந்திரக்கட்சியின் உபதலைவருமான திரு. ஆர். ஜீ. சேனநாயகா புதிய கட்சியொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அரசியல் வட்டாரங்களில் ஹேஷ்யம் அடிபடுகின்றது.

சுதந்திரக் கட்சியிலும் மற்ற இடதுசாரிக் கட்சிகளிலும் இவருக்கேற்பட்டுள்ள அதிருப்தி காரணத்தினாலேயே அவ்விதம் புதிய கட்சியொன்றை உருவாக்க இவர் உத்தேசித்துள்ளாராம்.

## நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வி

கொழும்பு, ஞாயிறு விசேஷ காணிக் குத்தகைச்சபை சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சியினர் தாக்கல் செய்திருந்த பிரேரணை பிரதிநிதிகள் சபையில் தோல்வியுற்றது.

இப் பிரேரணைக்கு எதிராக 86 வாக்குகளும் சாதகமாக 53 வாக்குகளும் கிடைத்தன.

## யாழ்ப்பாணநகர அபிவிருத்திக்கு மேலும் ரூபா 5 லட்சம்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபைப்பகுதி மின்சார விநியோகத்துக்கும் வடிகால் புனரமைப்பு வேலைகளுக்கும் மேலும் 5 லட்சம் ரூபாவை மாநகரசபை விசேஷ ஆணையாளர்கள் ஒதுக்கியுள்ளார்கள். இதில் இரண்டரை லட்சம் ரூபா மின்சாரவிநியோகத்துக்கும் மிகுதி இரண்டரை லட்சம் ரூபா வடிகால் புனரமைப்பு வேலைகளுக்கும் பாவிக்கப்படும்.

நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற மாநகரசபையின் விசேஷ ஆணையாளர்களின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஏற்கனவே இவ்வருட யாழ்ப்பாண மாநகரசபை பட்ஜட்டில் மின்சாரவிநியோகத்துக்கு 80,000 ரூபாவையே ஒதுக்கியிருந்தனர். இத் தொகை இங்கு மின்சார அபிவிருத்திக்கு போதாதென்பதாலேயே இத் தொகை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவைகளைக் கவனிப்பதற்காக உபகுழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 2-ம் திருவிழாவாகிய இன்று மாலை இரவு 7-30 மணி வரைக்கும் நல்லை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் சம்பூர்ண இராமாயணக் கதாப்பிரசங்கத் தொடரில் "சீதா கல்யாணம் என்னும் பொருள் பற்றிய பிரசங்கமும், இரவு 7-30 மணிக்கு வசந்த மண்டப பூசையும், பின் சுவாமி மூஷிக வாகனத்தில் வீதிவலம் வருதலும் நடைபெறும்.

### தொழிற்கல்லூரி வேலைகள்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணத்தில் அமைக்க [illegible] தொழிற்கல்லூரிக்கான கட்டிட வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கின்றன. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு தொழிற் கமிஷனர் திரு. விக்கன் அபயசேகரா நேற்று இங்கு வந்துசேர்ந்தார். [கா. நி.]

## மாவட்ட விவசாயக்குழு அங்கீகரித்தால்தான் காணி

### எம். பி. க்கள் அதிகாரிகளுக்கு இடையாது

கொழும்பு, ஞாயிறு மாவட்ட விவசாய குழுக்களினால் அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே விசேஷ காணிக் குத்தகைச் சபையினால் காணிகள் வழங்கப்படுமென்று விவசாய மந்திரி திரு. சி. பி டி' சில்வா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

விசேஷ காணிக் குத்தகைச் சபையினால் காணிகள் வழங்கப்பட்டது சம்பந்தமாக அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சியினர் தாக்கல் செய்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் மந்திரி இடையில் பேசினார்.

பாரிலிமெண்ட் அங்கத்தவர்கள், அவர்களின் மனைவிமார், அவர்களுடன் தங்கி

(6-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒவ்வொரு மாதமும் உங்கள் வருமானத்தில் இரண்டுசதவீதம் முதல் பத்துச் சதவீதம் வரை தருமம் செய்யுங்கள். உங்களிடமுள்ளவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். உலகமனைத்தும் உங்கள் குடும்பமாகக் கருதுங்கள். சுயநலத்தை அகற்றுங்கள்.

—சுவாமி சிவானந்தர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 12ம் திகதி [25-3-68]

# "பிரதேசவாரியாக நூல்களை அணுகக் கூடாது"

## கருத்தரங்கில் கவிஞர் கந்தவனம்

யாழ்ப்பாணம், திங்கள் "கட்சிரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் இலக்கியபடைப்புகளை நோக்குதல் சுவைக்க முற்படுதல் இரசனைத் தரத்துக்குப் பெரும் கேடு விளைக்கும் என்பது உறுதி. இந்நாட்களில் இரசனையையும் பிரதேசவாரியாக்கச் சிலர் முயல்கிறார்கள். பிரதேசவாரியான மனப்பான்மையுடன் நூல்களை அணுககூடாது இரசனை என்பது ஓர் எல்லைக்குட்பட்டதன்று கலைத்துவம்நிறைந்த படைப்புகளின் தரத்தைப் பாரபட்சமின்றி மதிப்பிடல் வேண்டும் சுவைத்துமகிழ்ந்து ஏற்றிப்போற்ற வேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் பொழுதுபோக்குச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற யாழ் இலக்கிய வட்டக்கருத்தரங்குக்குத் தலைமை வகித்த கவிஞர்வி. கந்தவனம் தலைமை உரையின்போது குறிப்பிட்டார்.

இரசிகமணி கனக செந்திநாதன் கட்டுரை நூலான பொ. கிருஷ்ண பிள்ளை எழுதிய இலக்கியச் சோலை பற்றிப் பேசினார். அவர் பேச்சின் போது இலங்கையில் கட்டுரை நூலாக்கம்மிகவும் குறைவாகவே ஆக்கப்படுகின்றனவென்றும்' அப்படி ஆக்கப்பட்ட நூல்கள் பல சமய சம்பந்தமான நூல்களாகவே உள்ளனவென்றுங் குறிப்பிட்டார்.

கவிஞர் இ. நாகராஜன் இலங்கையர்கோன் எழுதிய வெள்ளிப்பாதசரம் என்னும் நூல்பற்றிபேசும் போது உள்ளீடும் உருவமும் ஒன்றி உயர்ந்தகலையாக்கம் பெற்ற சிறுகதைகள் நமக்கு முன்னைய பரம்பரையினரால் மிகவும்கலை நுணுக்கத்துடன் படைக்கபட்டிருக்கின்றன என்பதற்கு ஆதாரமாகயுள்ள இலங்கையர்கோனின் வெள்ளிப் பாதசரம் உள்ளது குழந்தை இலக்கிய நூல் பற்றி சசிபாரதி பேசுகையில் 'ஐந்துவயது பாலகரை மட்டுமல்ல, 50 வயது சென்றமுதியவரையும் வளைக்கும் ஆற்றல் வாய்ந்தது இலக்கியம் என்றார். இவர் எழுத்தாளர் எம். ஏ. ரஹ்மான் எழுதிய இளமைப் பருவத்திலே' என்ற சிறுவர் நூல் பற்றி பேசினார்.

காரைசெ. சுந்தரம்பிள்ளை கவிஞர் சச்சிதானனின் ஆனந்தத் தேன் என்ற கவிதை நூல்பற்றியும் திரு. மு. கனகராசன் டாக்டர் நந்தியின் மலைக்கொழுந்து நூல்பற்றியும் திரு ஏ.ரீ. பொன்னுத்துரை ஓரங்க நாடகங்கள் பற்றி கருத்துரை வழங்கினர் செங்கை ஆழியான் நன்றி கூறினார். (நி)

## இடப்பிரச்னை

கொழும்பு, ஞாயிறு இடதுசாரிகளிடையே பொதுத்திட்டமொன்றை வரைவதற்காக கண்டியில் நடைபெறவிருக்கும் மகாநாடு சம்பந்தமாக சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சிகளுக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையே சிறிது கருத்துவேற்றுமை நிலவிவருவதாகத் தெரியவருகிறது.

சமசமாஜக் கட்சியினரும் கம்யூனிஸ் கட்சியினரும் கொழும்பில் இம்மகாநாட்டை நடத்துவதால் பலர் கலந்துகொள்ளக்கூடியவாய்ப்பிருக்குமெனவும் இதனால் செல்வாக்கை அதிகரிக்க இடமேற்படுமெனவும் கருத்துத் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இதற்கிடையில் சுதந்திரக் கட்சியைசேர்ந்தவர்களிசிலர் 'தனிச் சிங்கள' கொள்கைக்கு சமசமாஜக்கட்சியினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் முழு இணக்கமும் தந்தாலே கண்டியில் நடைபெறும் மகாநாட்டில் கலந்துகொள்ள அனுமதியளிக்க வேண்டுமெனவும் கோரியுள்ளதாகவும் அறியப்படுகிறது

## நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணம் நாவாந்துறையிலுள்ள ஜோமன் கத்தோலிக்க பாடசாலையில் கடந்த 35 வருடகாலமாக திரு நீக்கிலசப்பிள்ளை என்பவர் ஆசிரிய சேவைபுரிந்தார் சமீபத்தில் அவர் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற பொழுது அவருக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடந்தது.

அந்தக் கூட்டத்தில் ஒரு பெரும் அதிசயமான உண்மை வெளியாகிற்று. இந்த 35 வருட காலத்திலும் ஆசிரியர் நீக்கலாப்பிள்ளை ஒரே ஒருநாள் மட்டும் லீவு எடுத்திருக்கிறாராம்.

அந்த ஒரு நாள் லீவும் எதற்காகத் தெரியுமா?

ஏதோ ஒரு வழக்கில் நீதிமன்றம் செல்வதற்காக!

இந்தத் தகவலை மேற்படி ஆசிரியரின் பாராட்டுவிழாவின் போது தமைமை தாங்கிய குருவானவர் ஒருவர் வெளியிட்டார்.

ஆசிரியர் நீக்கிலாப்பிள்ளை ஒரு பழங்காலத்தவர் போலும் அல்லவிட்டால் மடைத்தனமாக இந்த 35 வருடகாலத்திலும் ஒரு நாளாவது சந்தர்ப் விடுதலையோ ஓய்வு விடுதலையோ சுகவீன விடுதலையோ எடுக்காமல் இருப்பாரா?

மனிதர் உண்மையில் பெரும் வைதீகர்தான். இக்காலத்தில் ஆசிரியர்களுக்கு எத்தனையோ சலுகை வசதிகள் இருக்கும்போதுஇந்த மனிதர் அவையொன்றையும் உபயோகப் படுத்தாமல் பேசாமல் மூக்கி மூக்கி 35 வருடம் தொண்டுசெய்திருக்கிறாரே?

இவர்போன்று கல்விக்காக சேவைபுரிந்து தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்து உலக இன்பங்களை வெறுத்து தொண்டு புரியும் ஆசிரியர்களுக்கு ஒரு போதும் பொன்னாடை போர்க்கப்படாது, சிலை எழுப்பப்படாது! இவையெல்லாம் நமது தமிழ்ப் பண்பாட்டுக்கு அப்பாற்பட்டவை!!

ஃ ஃ ஃ

ஆசிரியர் நீக்கிலாப்பிள்ளை போன்றவர்கள் இக்காலத்தில்'நெஸ்பிறே'போல் அரிதாகிவிட்டார்கள். உண்மைத் தொண்டு எது. பொய்ப்பகட்டு எது என்று அறியாமல் பொதுமக்கள் தத்தளிக்கிறார்கள் பத்தரை மாற்று எது, பித்தளைத் தங்கம் எது என்று தெரியாமல் தவிக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

மன்னார் பிரதேச கலா மன்றம் வருடாந்தகலைவிழா ஒன்றை நடத்தத்திட்டமிட்டிருக்கிறதாம். இந்த கலைவிழாவுக்கு செலவிடப்படும் பணத்தை உணவு உற்பத்தி முதலிய மக்களுக்கு அத்தியாவசியமான தேவைகளுக்கு உபயோகப்படுத்தும்படி மன்னார்மாவட்ட பொதுநல சங்கம், பிரதேச கலா மன்றத் தலைவரான மாவட்ட அதிபருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது,

மன்னார்ப்பகுதியில் சூறாவளியும் வெள்ளப்பெருக்கும் விவசாயத்தைப் பெரிதும் பாதித்துவிட்டன. இந்த சூழ்நிலையில் கலைவிழா போன்ற களியாட்ட விழாக்கள் அனாவசியம் என்று அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இச்சங்கத்திற்கு எமது மனப்பூர்வமான பாராட்டுகள்!

உரோமாபுரி தீப்பிடித்து எரிய நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தது போல மக்கள் பசியாலும் பிணியாலும் பற்றாக்குறையாலும் வாடி வதங்கும் போது கலைவிழா, என்னகலைவிழா?

—வழிப்போக்கன்

## இன்றைய பலன்

பங்குனி மீ 12 உ [25-3-68] திங்கட்கிழமை

திதி- துவாதசி.

நட்சத்திரம்- அவிட்டம்.

ராகுகாலம்- 7-45—9-15.

சுபநேரம்- 12-15—1-45.

இன்று பிறந்தவர்களுக்கு:- இவ்வாண்டு மேடு - பள்ளம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. தொழில் துறையில் அதிக முயற்சி எடுப்பினும் முன்னேற்றம் அவ்வளவு திருப்திகரமாக இருக்காது. மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு இலக்காகநேரிடும். மாணவர்களாயின் கல்வியில் அதிக்கவனம் செலுத்தவும். குடும்பஸ்தர்களின் வாழ்வில் அபிப்பிராய பேதங்கள் இடம்பெறும். சந்தேகத்தைத் தவிர்த்துக் கொண்டால் நிம்மதி தானாகவே பிறக்கும்.

மேஷம்- பிறந்தக நினைவு, பிரிவின் ஏக்கம்.

ரிஷபம்- அன்னை மனம் குளிரும், அனைத்திலும் வெற்றி.

மிதுனம்- உயர்ந்த நோக்கு, உரிமையும் கிடைக்கும்.

கடகம்- திடீர் தாக்குதல், திகைக்கவைக்கும் சம்பவம்.

சிம்மம்- வீட்டில் அமைதி, புதிய விருந்தினர்

கன்னி- நம்பிக்கை நாசம் நலிந்த வாழ்வு.

துலாம்- தெய்வகுரு பக்தி, தேடியது கிடைக்கும்.

விருச்சிகம்- தொழில் வள பெறும், எழில் சேர்க்கும் வாழ்க்கை.

தனுசு- பொருள்வரவு, புதினம் கேட்டல்.

மகரம்- சித்தியில் தாமதம், நத்தை வேகம்.

கும்பம்- மந்தநிலை மகிழ்ச்சியைக் கெடுக்கும், மறதிக்குணம்.

மீனம்- சொற்சிறப்பு, சொகுசான வாழ்வு.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

# யாழ்ப்பாண வரலாறு நூலாக வெளிவரும்

யாழ்ப்பாணம், திங். "அழகு வாய்ந்த யாழ்ப்பாணம்' என்ற ஒரு நூலை யாழ்ப்பாணம் மாநகர சபையினர் விரைவில் வெளியிடவிருக்கின்றனர். இலங்கை வரும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் பொருட்டு யாழ்ப்பாணம் பற்றிய வரலாறுகளும் வர்ணப் படங்களும் இந்நூலில் பிரசுரிக்கப்படும்

அடுத்த மேமாதம் 15-ந் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபையினர் மேற்கொள்ளவிருக்கும் 'குடிமை வாரத்தை முன்னிட்டே இந் நூல் பிரசுரிக்கப்படவுள்ளது இத்தீர்மானம் அண்மையில் நடைபெற்ற அமைப்புக்குழுக்கூட்டத்தில தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் திரு. ஹட்சன் செல்வராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடபகுதி கல்லூரி அதிபர்கள், டாக்டர்கள், பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இவ்வாரத்தில் மாநகரப்பகுதிகள் சுத்திகரிப்பு செய்யப்படுவதோடு, பாடசாலைகள் பல போட்டிகளும் நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே, கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி ஆகியனவும் நடாத்தி பரிசில்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (கா. நி.)

## பூட்டானில் திரு. தேசாய்

திம்பு, மார்ச் 24

பூட்டானுக்கு விஜயம் செய்துள்ள இந்திய துணைப் பிரதமர் திரு மொராஜி தேசாய் நேற்று பூட்டானின் முதலாவது விமான நிலையத்தைத் திறந்துவைத்தார். பூட்டானின் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க இந்திய எல்லைப் படையினர் இந்த விமான நிலையத்தை அமைத்துக் கொடுத்திருந்தனர்,

திரு தேசாய் பூட்டான் தலைநகரான திம்புவில், பூட்டான் மன்னரையும் மன்னர் ஆலோசனை சபையையும் சந்தித்து இன்று பேச்சுவார்த்தைகள் நடத்தவிருக்கின்றார்.

## சாம்ராஜ்ய இளைஞர் பிரிட்டனுக்கு செல்வர்

லண்டன், மார்ச் 24

இலங்கை, இந்தியா பாகிஸ்தான் உட்பட சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த 21 இளைஞர்கள் பிரிட்டனுக்கு நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கிறார்கள். அக்டோபர் 8.ம் திகதி பிரிட்டனுக்கு விஜயத்தை மேற்கொள்ளும் இவர்கள் சுமார் நான்கு வாரங்களவரை பிரிட்டனில் தங்கியிருப்பார்கள்.

தனது நூற்றாண்டு பூர்த்திவிழாவை முன்னிட்டு ரோயல் சாம்ராஜ்ய சங்கம் இந்த நல்லெண்ணத்தூதை ஒழுங்கு செய்திருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் இத்திட்டத்திற்கு ஆதரவளித்து வருகிறது. இன்னும் சில வாரங்களில் இந்த நல்லெண்ண தூதுகோஷ்டியினர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## பெட்ரோல் ஆராய்ச்சி

வடபகுதியில் பெட்ரோல் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்டதைத்தொடர்ந்து பிரஞ்சு நிபுணர்கள் சிலர் வடபகுதியில் பல இடங்களிலும் ஆராய்ச்சி நடத்தினர். இந்த ஆராய்ச்சி எந்த அளவுக்குப் பயனளித்திருக்கிறதென்பது பற்றித் தெரியவில்லை இலங்கையின் பொருளாதாரத்தில் புதியதொரு திருப்பத்தையே ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இங்கிருப்பது உண்மையானால் அதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி விழிப்புடன் துரிதமாகச் செயலாற்ற வேண்டும்.

இலங்கைக்கு கோடிக்கணக்கில் வெளிநாட்டு உதவி கிடைக்கவிருக்கிறது. இந்த உதவியில் பெரும்பாலும் ஆறு முக்கிய திட்டங்களுக்குச் செலவிடப்படவிருக்கின்றன. நீர்ப்பாசனம், விவசாயம், மகாவலிகங்கைத் திட்டம், மஸ்கெலியஓயாவின் சக்தித்திட்டம், தண்ணீர்வி நியோகத்திட்டம், வீதி அமைப்புத்திட்டம் ஆகியவைகளே அந்த ஆறு திட்டங்களுமாகும். இத்திட்டங்கள் நாட்டிற்குத் தேவையான, நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியமான திட்டங்களே கிடைக்கும் உதவியைச் சரியான முறையில் திட்டங்களுக்குப் பயன்படுத்தவேண்டும்.

பெட்ரோலுக்கும்பெட்ரோலியப் பொருள்களுக்குமாகப் பெருந்தொகையான பணம் வெளி நாடுகளுக்குப் போய்ச் சேருகின்றது. இந்தியா விடுதலை அடைந்ததும் பல இடங்களில் ஆராய்ச்சி செய்து எண்ணெய் வயல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இப்போது இந்தியாவிலேயே இந்தியாவுக்குத் தேவையான பெட்ரோல், பெட்ரோலியப் பொருள்கள் கிடைக்கின்றன எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளும் நிறுவப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலும் கூடப் பெட்ரோல் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இந்தியாவில் எண்ணெய் வயல்கள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி நடைபெற்ற போது, வெளி வல்லரசுகள் அதற்குப் பல விதத்திலும் இடையூறு செய்ய முனைந்தன. ஆனால் அப்போது பிரதமராக இருந்த திரு. நேரு வெளியாரின் இடையூறுகளையும் எதிர்ப்புக்களையும் சமாளித்துத் தமது முயற்சியில் வெற்றி கண்டார்.

இங்கும் பெட்ரோல் ஆராய்ச்சிக்குப் பலவித இடையூறுகள்ஏற்படலாம் வடபகுதியிலேயே இந்த வாய்ப்பு இருப்பதால் அரசியல் காரணங்களுக்காக இதைப் பயன்படுத்தவும் இங்கு சிலர் தடையாக இருக்கலாம்.

ஆனால் இலங்கையில் எந்தப் பகுதியிலாவது பெட்ரோல் கிடைக்குமானால் அது நாட்டுக்கே பெரும் நன்மை தரக்கூடியது என்பதை உணர்ந்து அரசாங்கம் இதில் அதிக அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். இதுவரை நடைபெற்ற ஆராய்ச்சியின் பலாபலன் பற்றி நமது பிரதிநிதிகளும், அரசாங்கத்திடமிருந்து தகவல் தெரிந்து கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனன காஷ்மீர் இணைப்பை யாராலும் மாற்ற முடியாது

## முதலிலிருந்து அதை ஆதரித்தவர் திரு. ஷேக் அப்துல்லாவே

### காஷ்மீர் பிரதமர் சாதிக் கூறுகிறார்

ஸ்ரீநகர், மார்ச். 24

இந்தியாவின் பிற பகுதிகளில் வாழும் மக்களின் விதியுடன், காஷ்மீர மக்களின் விதி இணைக்கப்பட்டுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையென்றும், அதைஇனி யாராலும், முக்கியமாக அந்த இணைப்புக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்களாலும், மாற்றமுடியாதென்றும் காஷ்மீர்பிரதமர் திரு. சாதிக், நேற்று காங்கிரஸ் ஆதரவில் ஸ்ரீநகரில் நடைபெற்றஒருபொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

'சுதந்திரத்துக்குப் பின்னர், அப்போதைய காஷ்மீர்த் தலைவர்கள், இந்தியாவுடன் இணைவது என்று முடிவுசெய்தனர். பின்னர் வயதுவந்த மக்களின் வாக்குரிமையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை, அந்த முடிவை ஊர்ஜிதம் செய்தது' இவ்வாறு கூறினார் திரு சாதிக்.

திரு. ஷேக் அப்துல்லா காஷ்மீர்பற்றித் தெரிவித்து வரும் முரண்பட்ட கருத்துக்களைப்பற்றி அவர் குறிப்பிடுகையில், இந்தியா ஒரு ஜனநாயக நாடென்றும், அதில் எல்லோரும் தமது கருத்துக்களை வெளியிட சுதந்திரமுண்டென்றும் கூறிய திரு. சாதிக், அத்தகைய கருத்துக்கள், மற்றவர்களின் சுதந்திரத்தில் குறுக்கிடும் பட்சத்தில்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கு மென்று தெரிவித்தார்.

திரு. ஷேக் அப்துல்லா தலைமையில் தான் காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது என்றும், அரசியல் நிர்ணய சபைத் தேர்வுக்குப் பிறகும் அவர் இந்தியாவுடனன இணைப்பை ஆதரித்தார் எனவும் சாதிக், மக்களுக்குநினைவூட்டினார்.

காஷ்மீரில் பொதுஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்த வேண்டுமெனத் திரு. ஷேக் அப்துல்லா கோருவதை எடுத்து திரு. சாதிக் குறிப்பிடுகையில், முதலில் தான் ஆக்கிரமித்துள்ள பகுதியிலிருந்து பாகிஸ்தான் வெறியேறியபின்னர்தான், அதைப் பற்றிச் சிந்திக்கமுடியும் என்றார்.

# இஸ்ரேலைக் கண்டித்து பந்தோபஸ்து சபையில் தீர்மானம்

## தடை நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

நியூயோர்க், மார்ச். 24

அண்மையில் ஜோர்தான்மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலைக் கண்டித்து இந்தியா, பாகிஸ்தான், செனகல் ஆகிய மூன்று நாடுகளும் ஐ. நா. பந்தோபஸ்து சபையில் ஒரு தீர்மானத்தை நேற்றிரவு தாக்கல் செய்துள்ளன.

ஐ. நா. சாஸனத்துக்கு முரணாகவும், மேற்கு ஆசிய போர் நிறுத்த உத்தரவை மீறியும் இஸ்ரேல் நடந்துகொண்டுள்ளதாக அத்திர்மானம் குற்றஞ் சாட்டியது.

பொருளாதாரத் தடை, இராணுவப்பலப் பிரயோகம் உட்படத் தனது அதிகாரத்துக்குட்பட்ட சகல தடை நடவடிக்கைகளையும் இஸ்ரேலுக்கெதிராகச் சபை எடுத்துக் கொள்ள வேண்டுமென அத்தீர்மானம் கோரியது.

கடந்த நவம்பரில், சபையில் நிறைவேற்றப்பட்ட மேற்காசிய சமரசத்தீர்மானத்துக்கு முரணான எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாதிருக்குமாறு, தீர்மானம் இஸ்ரேலைக் கேட்டுக்கொண்டுள்ளது.

மேற்கு ஆசிய நிலைமையை அவதானித்து, அவ்வப்போது தக்கநடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு தீர்மானம் ஐ. நா. பொதுக்காரியதரிசியை வேண்டிக்கொண்டது.

### சமரசம் ஏற்படவில்லை

சுமார் ஆறு மணி நேரமாகப் பந்தோபஸ்து சபைப் பிரதிநிதிகள் கலந்தாலோசித்தும், மேற்கு ஆசியப் பிரச்னை மீது அவர்களால் சமரச தீர்மானமொன்றைத் தாக்கல்செய்ய முடியவில்லை.

இதற்கு முக்கிய காரணம், இஸ்ரேலைக்கண்டிக்கும் தீர்மானத்தில், அரபுநாடுகளின் பலாத்கார நடவடிக்கைகளையுங் கண்டிக்கும் பகுதி சேர்க்கப்படவேண்டுமென மேற்கத்தைய நாடுகள் வலியுறுத்தியதேயாகும்.

## இஸ்ரேல் — ஜோர்தான் புதிய மோதல்

அம்மான், மார்ச் 24

மேற்கு ஆசியப் பிரச்னையைப் பந்தோபஸ்து சபை விவாதித்துக்கொண்டிருந்த அதேநேரத்தில், நேற்றிரவு இஸ்ரேல் துருப்புகளும் ஜோர்தான் துருப்புகளும் புதிதாக மோதிக்கொண்டன.

இஸ்ரேல் துருப்புகள், ஜோர்தான் துருப்புகள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து முதலில் தாக்கியதாகவும், தாம் அத்தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் நடத்தியதாகவும், தமது பக்கத்தில் எவ்வித சேதமும் இல்லையெனவும் ஜோர்தான் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஜெனரல் வெஸ்ட் மோர்லாண்ட் பதவி மாற்றம்

## அமெரிக்க போர்க்கொள்கையில் ஒரு திருப்பம் என்கிறார் கென்னடி

வாஷிங்டன், மார்ச் 24

வியட்னாமில் அமெரிக்க துருப்புகளுக்குத் தலைமை தாங்கும் ஜெனரல் வெஸ்ட் மோர் லாண்டை அமெரிக்காவுக்குத் திருப்பியழைப்பதென்ற ஜோன்சன் நிர்வாகத்தின் முடிவு, அமெரிக்கப் போர்க் கொள்கையில் ஒரு புதிய திருப்பத்தைக் குறிப்பதாகச் செனேட்டர் ரொபேட் கென்னடி இங்கு கூறினார்.

அமெரிக்கப் போர்க் கொள்கையை அமெரிக்க அரசாங்கம் புனராலோசனை செய்யப் போவதாக அண்மையில் அமெரிக்க உபஜனாதிபதி திரு ஹியூபேட் ஹம்ப்ரி கூறியுள்ளதைத் தாம் வரவேற்பதாகவும் திரு. கென்னடி தெரிவித்தார்.

# நியூயோர்க்கில் வியட்னாம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

நியூயோர்க், மார்ச் 24

நேற்று நியூயோர்க்கில் வியட்னாம் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட மொன்றைக் கலைக்கப் பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

நவீன மோஸ்தர் உடையணியும், 'ஹிப்பீஸ்' என அழைக்கப்படும் இளைஞர்கள் 3,000க்கு மதிகமானோரே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வியட்னாம்போருக்கு இளைஞர்கள் அழைக்கப்படுவதை எதிர்த்து அவர்கள் கோஷமிட்டனர்.

பொலிசார், 50க்கும் மேற்பட்ட வாலிபர்களைக் கைது செய்தனர்.

## இத்தாலி, ஜேர்மனியிலும்

ரோம், மார்ச் 24

இத்தாலியின் தலைநகரான ரோமிலும் வியட்னாம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்தன.

ரோமிலுள்ள அமெரிக்க தூதரகத்தைக் காவல் புரிந்துநின்ற பொலிசாருடன் அவர்கள் மோதினர்.

மற்றும் பல இத்தாலிய நகரங்களிலும் மேற்குபெர்லினிலும் வியட்னாம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

## போலந்தில் மாணவ ஆர்ப்பாட்டங்கள்

வார்சோ, மார்ச் 24

போலாந்தில்மாணவர்கள் நடாத்திவந்துள்ள ஆர்பாட்டங்கள் இப்போது ஓரளவு தணிந்துள்ளன.

வார்சோ தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 3000 மாணவர்கள் நேற்றுவேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்திருந்தனர் ஆனால் வேலைநிறுத்த முடிவை அவர்கள் அமுல் நடத்தத் திட்டமிட்ட நேரத்துக்கு ஒருசில நிமிடங்களுக்கு முன்னதாகப் பொலிசார் கல்லூரியைச் சுற்றி வளைத்துக் கொண்டதால் மாணவர்களின் திட்டம் முறியடிக்கப்பட்டது.

# பிரிவினைச் சக்திகளை சவான் கண்டித்தார்

பூனா, மார்ச் 24

பூனாவுக்கருகே ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய இந்திய உள்துறைமந்திரி திரு. சாவான் நாட்டில் தோன்றியுள்ள பிராந்திய வாதம் மொழிவாதம் ஆகிய பிரிவினைச் சக்திகளைக் கண்டித்துள்ளார்.

கச் தீர்ப்பை இந்தியா ஏற்றுக் கொண்டது பற்றிச் சிலர் இன்னும் அதிருப்தி தெரிவிப்பது பற்றி அவர் குறிப்பிடுகையில் சர்வதேச நீதிமன்ற மொன்றின் தீர்ப்பான அதை ஏற்றுக்கொள்ளவேண்டிய கடமை இந்தியாவைச் சார்ந்துள்ளதாகவும் கூறினார்.

நாட்டில் பலவித 'சேனைகள்' புறப்படுவது பற்றித் திரு. சவான் குறிப்பிடுகையில் இந்திய தேசியத்தைப் பாதுகாக்க ஒரு இந்திய சேனை இருக்கும் போது வேறு சேனைகளின் அவசியம் தமக்கு விளங்கவில்லை என்றார். பம்பாயில் இயங்கும் சிவசேனையை மனதில் வைத்தே அவர் இவ்விதம் கூறியதாகக் கருதப்படுகிறது.

இந்தியாவின்பாதுகாப்புக் குழுமத்தியில் பலமான அரசாங்கம் இருக்கவேண்டியதன் அவசியத்தையும் திரு. சவான் வலியுறுத்தினார்.

இந்திய ஒற்றுமையைக் காக்கும் அதே நேரத்தில் பிராந்திய கட்டத்தில், மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவும் நாம் தவறிவிடக் கூடாது என்று அவர் மேலும் கூறினார்.

## லாவோஸில் சண்டை

வியென்ஷியென், மார்ச் 24

லாவோஸில் அரசாங்கத் துருப்புக்களுக்கும் பதெட் லாவோத் துருப்புக்களுக்குமிடையேயான சண்டை தீவிரமடைந்து வருவதாக லாவோஸ் இளவரசர் சூவனா பூமா அறிவித்துள்ளார்.

பதெட்லாவோ [கம்யூனிஸ்ட்] துருப்புகள் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# டெலிவிஷன்மூலம் 'செக்' மாற்றுதல்

## ஜேர்மன் வங்கியில் புதிய முறை

ஸ்டட்கார்ட், மார்ச் 24

'செக்' கை மாற்ற வங்கிகளில் எடுக்கப்படும் காலதாமதத்தை தவிர்க்க ஜேர்மன் வங்கியொன்று ஒரு புதிய முறையைக்கண்டு பிடித்துள்ளது.

இந்த வங்கியில் டெலிவிஷன் மூலம் 40 விநாடிகளில் ஒருசெக் மாற்றப்படுகிறது.

வாடிக்கையாளர் தமது செக்கைக் கொண்டுபோய்க் கொடுத்ததும் அச்செக் ஒருசிறிய டெலிவிஷன் காமிரா முன் வைக்கப்படும். சேவகர் ஒருவர் பொத்தான் ஒன்றை அழுத்துவார். உடனே காசாளரின் கூட்டினுள் உள்ள திரையொன்றில் அந்தச் செக் தோன்றும். அவர் அதைப் பார்த்துவிட்டு தம்மிடமிருக்கும் பட்டியல்களுடன் 'செக்' கை ஒப்பிட்டுப் பார்ப்பார். முறையானதென்றால். 'சரி பணம் கொடுக்கலாம்' என்பதற்கு அடையாளமாக காசாளர் பொத்தானை அழுத்தி வெளிச்சமொன்றைக் காண்பிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அரசாங்க இலாகாக்களில் தில்லுமுல்லுகள்

## மக்கள் வெறுப்புக்கு இதுவே காரணம்'

## என்கிறார் பட்டிருப்பு எம். பி.

முழுவாஞ்சிக்குடி, ஞாயிறு "இன்று நாட்டில் எப்பக்கம் நோக்கிலும் பொதுமக்களிடையே சோர்வும் நம்பிக்கையின்மையும் ஏக்கநிலையுமே காண்கிறோம். இந்த நிலையைத் தவிர்த்து பொதுமக்களிடையே நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் வளர்க்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்" என்று முல்லைத்தீவு சனசமூக நிலையத்தில் திரு. கா. சுப்பிரமணியர் தலைமையில் நடந்த கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் பட்டிருப்பு எம். பி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"நாட்டில் பொதுமக்களிடையே வெறுப்பும் அவநம்பிக்கையும் ஏற்படக்காரணமாகஇருப்பது இன்று அரசாங்கஇலாகாக்களில் நடக்கின்றதில்லுமுல்லுகளும் துரித வேலையின்மையும். எதையும் தட்டிகழித்துகாலத்தை வீணாக்குகின்ற சுபாவமுமேயாகும். ஒவ்வொரு இலாகாக்களும்தன்தன் வேலையை சரிவரச் செய்துகொண்டே போகுமேயானால் பொதுமக்கள் தங்கள் தேவைகளை தாங்களே இலாகாக்களோடு தொடர்புகொண்டுசெய்யும் நிலையும் நினைப்பும் வளரும்.

இந்த நிலை ஏற்பட்டால் அரசாங்கம் செய்யும் துரித அபிவிருத்தி வேலைகள் நன்கு பலனளிக்கும். தற்போது இலாகாக்களும் அவற்றை நிருவகிக்கும் அதிகாரிகளும் பொதுமக்களுக்கு வேண்டிய சாதாரண தேவைகளையும் கடமைகளையும் உரிய நேரத்தில் செய்யாதுவிடுவதால் அதைச் செய்வதற்குக் கூடப் பொதுமக்கள் எம். பிக்களை நாடவேண்டிய துரதிர்ஷ்டநிலை நீடித்துவருகிறது. ஆனல் மேலைநாடுகளில் இந்நிலை இல்லை.'

# போத்தல் மாறியதால் மரணம் சம்பவித்தது

அனலைதீவு, ஞாயிறு சாராயம் என நினைத்து பெட்ரோல் குடித்த 40 வயதுடைய மணமான ஒருவர் ஆபத்தான நிலையில் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு திடீர் மரணமானார். இச்சம்பவம் அனலைதீவில் நடைபெற்றுள்ளது.

அனலைதீவைச் சேர்ந்த ச. வைத்தியநாதர் முத்துக்குமாரு என்பவரே இவ்விதம் மரணமடைந்தவராவார். சாராயப்போத்தலுக்குப் பக்கத்தில்இருந்த பெட்ரோல் போத்தலை மாறி எடுத்துக் குடித்துவிட்டதாகவும் குடிக்கும்சமயமும் மதுபோதையில் இவர் இருந்ததாகவும் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது. ஊர்காவற்றுறைப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. மகாலிங்கம் மரண விசாரணை நடாத்தினார்.

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி பதில் வைத்திய அதிகாரி திரு. விநாயகலிங்கம், திருமதி முத்துக் குமாரு சிவக்கொழுந்து, திரு. ஐ. நடராசா, திரு. வே. கந்தையா ஆகியோர் சாட்சியமளித்தனர். மிதமிஞ்சிய வெறியினால் பெட்ரோலை மாறிக்குடித்ததால் மரணம் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்த மரணவிசாரணை அதிகாரி, பரிதாபமான வீண் இறப்பென்று கூறி தற்செயலாக ஏற்பட்ட திடீர் மரணமெனத் தீர்ப்பளித்தார்.

ஊர்காவற்றுறை பொலிசைச் சேர்ந்த திரு. சே. சுப்பிரமணியம் சாட்சியங்களைப் பதிவுசெய்தார்.

# "சுகாதார முறையை ஒட்டியே அனுட்டானங்கள்"

உடுவில், ஞாயிறு "எம் இனத்தவரிடையே இன்று அந்நிய நாகரிகங்கள் கையாளப்பட்டுவருகின்றன. பரம்பரையாக கையாளப்பட்டுவந்த சமய அனுட்டானங்களும், ஒழுக்கங்களும் கைவிடப்பட்டுவருகின்றன. பழைய முறைகளினால் பல நன்மைகள் எமக்கு உண்டு. சுகாதார முறையை ஒட்டியே சமய அனுட்டானங்கள் ஆக்கப்பட்டன. அவற்றைக்கடைப்பிடித்தல் அவசியம். நாள்தோறும் நாம் மனம், வாக்கு காயம் இவற்றால் செய்துவரும் பாபங்களைப் போக்கிக்கொள்வதற்காகவே மூன்றுகாலங்களிலும் சந்தியாவந்தனம் செய்துவருகின்றோம்."

அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தின் வருடாந்த மகாசபைக் கூட்டம் இன்று மாலை சுன்னாகத்திலுள்ள ஸ்ரீசதாசிவப்பிராமணபாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது "கர்மானுஷ்டானங்களும், தத்துவமும்" என்னும் விஷயம் பற்றி பேசிய பண்டிதர் பிரம்மஸ்ரீ தி. விஸ்வநாதக்குருக்கள் மேற்கண்டவாறு கூறினார்.

வித்துவ சிரோன்மணி பிரம்மஸ்ரீ தி. சி. சீதாராம சாஸ்திரிகள் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

சிவப்பிராமண சங்கத்தின் நடப்பு வருடத்திற்குரிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: பண்டிதர் பிரம்மஸ்ரீ தி. விஸ்வநாதக்குருக்கள், உபதலைவர்: பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணியக்குருக்கள், செயலாளர்: திரு சி. வெங்கடேச சர்மா, தனாதிகாரி: திரு. எஸ். சோமாஸ்கந்த சர்மா.

மேலும் ஏழு பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் மேற்படி கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

## "அன்பு அஹிம்சை பெரியோர்கள் காட்டியவழி"

கோப்பாய், ஞாயிறு 'நமது முன்னோர்களாகிய சமய குரவர்கள் யாவரும் அன்பை அடிப்படையாகக் கொண்ட நமது சைவசமயத்திற்கும், தமிழுக்கும் அன்பு நெறியிலே அருந்தொண்டாற்றியே இறையின்பம் பெற்றார்கள்" எனக் கோப்பாய் திருவருள் தவநெறிமன்றத்தாரால் நடாத்தப்பட்ட காரைக்காலம்மையார் குரு பூசை விழாவில் கலந்து உரையாற்றுகையில் திரு. ஆர். பி. ஹரன் கூறினார்.

மேற்படி மன்றத் தலைவர் திரு. பொ. தி ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், திருஹரன் மேலும் பேசுகையில் "சைவசமயத்தவர் அனைவரும்தமது சமயத்தையும், மொழியையும் வளர்ப்பதற்கு உயர்வு தாழ்வு மனப்பான்மைகள், குரோதங்களை அடியோடு களைந்து எங்கும் அன்பும், சமாதானமும் நிலவச் செய்து நமது பெரியோர்கள் காட்டிய பாதையிலே சேவையாற்ற முன்வரல் வேண்டும்' என்றார்.

## இவர்கள்மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் வடமாகாணத்தில் விலைக் கட்டுப்பாட்டை மீறும் வர்த்தகர் மேல் திடீர் பரிசோதனை நடத்த உணவுக் கட்டுப்பாட்டிலாகா திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

திடீர் வேட்டையில் ஈடுபட்ட உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் உரும்பிராய்ச் சந்தியில் பால் டின்களை வைத்துக்கொண்டு விற்க மறுத்த ஒரு வர்த்தகர்மீது நடவடிக்கைஎடுத்துள்ளனர்

இந்த வர்த்தகர்மீது வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக உணவுக்கட்டுப்பாட்டிலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார் [வி.நி.]

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

திங்கட்கிழமை

25-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற் சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 இனக்குறிப்பு. 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கதம்ப இசை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 பாவனம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 விவாத மேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி, ... மங்கலம் ... பின்னே.

## டிப்போவிலிருந்து மறைந்த பஸ் உதிரிப்பாகம் பஸ்ஸுக்குள் வந்தது எப்படி?

### முல்லைத்தீவு பொலிஸார் விசாரணை

### தற்கொலை

கோப்பாய், ஞாயிறு தனக்கு ஏற்பட்ட கண் வருத்தம் தாங்காது கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று கோப்பாய் வடக்குப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

முருகன் சின்னட்டி என்னும் 60 வயதுடைய வயோதிபரே மேற்படி பரிதாப மரணத்திற்குள்ளானவராவர்.

இம்மரணம் குறித்துக் காலஞ்சென்றவரின் மனைவி நாகி என்பவர் சாட்சியமளிக்கையில், காலஞ்சென்ற தனது கணவன் கடந்த சில காலமாகக் கண்வருத்தத்தினால் துன்புற்றாரெனவும், அதன் காரணமாகவே அவர் தற்கொலை செய்யநேரிட்டதெனவும் கூறினார்.

மரணவிசாரணை முடிவில் விசாரணை நடாத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. இராசநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்

### தொல்புரத்தில் கொலை

### சந்தேக நபர் கைது

சங்கானை, ஞாயிறு தொல்புரம் பொத்தியாவத்தையைச் சேர்ந்த கிருஷ்ணன் பாலசிங்கம் என்பவர் நேற்று மாலை கத்தியால் வெட்டப்பட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார் இது சம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான கணபதி இராசையா பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக இன்ஸ்பெக்டர் திரு. மென்டிஸ் தலைமையில் தொடர்ந்து விசாரணை நடைபெறுகின்றது.

### குறைகள் நீங்கும்

திருக்கோணமலை, ஞாயிறு தம்பலகாமம் அரசினர் ஆஸ்பத்திரியில் மின்சாரமில்லாத குறை நிவர்த்தியாக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

கந்தளாய்க் கிராமத்தில் மரண விசாரணை அதிகாரி ஒருவர் இல்லாதது ஒரு பெருங் குறையாக விருந்தது. இந்தக்குறையும் விரைவில் நிவர்த்தி செய்யப்படும் எனத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் ஞாயிறு முல்லைத்தீவிலிருந்து வவுனியாவுக்குப் பயணமாகவிருந்த இ. போ. ச பஸ் ஒன்றினுள் உரிமை கொண்டாடப்படாத பார்சல் ஒன்று காணப்பட்டதையடுத்து குறிப்பிட்ட பஸ் கண்டக்டர் பார்சலைத் திறந்து பார்த்தபோது அதனுள் பஸ்ஸின் உதிரிப்பாகமொன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

இந்த உதிரிப்பாகம் முல்லைத்தீவு பஸ் டிப்போவில் பழுதுபார்ப்பதற்காக விடப்பட்டிருந்த வேறொரு பஸ்ஸிலிருந்து கழற்றி வைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த உதிரிப்பாகம், முல்லைத்தீவு டிப்போவிலிருந்து காணவில்லையென ஏற்கெனவே பொலிஸாருக்கு புகார் செய்யப்பட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

இந்த உதிரிப்பாகம் எவ்விதம் குறிப்பிட்ட பஸ்ஸினுள் வந்தது என்பது சம்பந்தமாக இப்போது முல்லைத்தீவுப் பொலிஸ் தீவிர புலன்விசாரணை செய்து வருகின்றது. (நல். நி.)

### இளம்பெண்களுக்கு ஓர் ஆலோசனை

வவுனியா, ஞாயிறு 'விவசாயிகளை விரும்பி மணக்க இளம்பெண்கள் முன்வரவேண்டும். அப்போதுதான் நாட்டில் உணவு உற்பத்தி அதிகரிக்கும்' என நம்பைக்குளத்தில் நடைபெற்ற நிரைவிதைப்புக்கு தலைமைதாங்கி உரைநிகழ்த்திய வவுனியா விஸ்தரிப்பு சேவையாளர் திரு பொ. கனகநாயகம் கூறினார்.

உத்தியோகத்திலிருப்பவர்களைத்தான் திருமணம் செய்யவேண்டும் என்ற போக்கை மாற்றி இவ்விதம் விவசாயிகளை திருமணம் செய்வதால் பல பிரச்னைகள் தீர்க்கப்படுவதோடு நாட்டுக்கும் அதனால்பெரும் நன்மை ஏற்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

### விவேகானந்த மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டி

அநுராதபுரம், ஞாயிறு விவேகானந்த தமிழ் மகாவித்தியாலய இல்லங்களுக்கிடையேயான போட்டி வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவிருக்கிறது. பிரதம அதிதியாக செனட்டர் திரு. த. நீதிராசா கலந்துகொள்ளவிருக்கிறார்.

திரு சி. சின்னத்துரை வெற்றி பெறும் மாணவர்களுக்குப்பரிசில்களை வழங்குவார்.

நவாலியூர்
பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியக்குருக்கள் அவர்கள்
கூறுகிறார்கள்:
**சுந்தரம் பிறதர்ஸ்**
ஸ்தாபனத்தாரால் விநியோகிக்கப்படும்
**பச்சை சந்தனம்**
கோவில் தேவைக்கும்
மற்றும் மங்களக் காரியங்களுக்கும் சிறந்தது.
இறைவன் திருமேனியில்
**சந்தனக் காப்பிட்டு**
அவனின் திருவருளைப் பெறுவதற்கும்
சிறந்த வஸ்துவாக அமைகிறது.
**சுந்தரம் பிறதர்ஸ்**
(கோவில் அபிஷேக திரவிய வியாபாரிகள்)
73, மின்சாரநிலையவீதி—யாழ்ப்பாணம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கிலியன் வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு சங்கிலியன் கோஷ்டிக்கும், கொழும்பு யோலி போஸ் கழகக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சங்கிலியன் கோஷ்டியினர் இரண்டு கோல்களைப்போட்டுவெற்றி பெற்றனர். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. திரு. க. இராமநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

45-வது தினம்!
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர். - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா?

MANOHARA
JAFFNA
Daily at
4-00, 7-00 & 10-00 p. m.
John Wayne
Kirk Douglas
in
IN HARM'S WAY
(Cinemas cope – War Film)

REGAL JAFFNA
Daily at
4-40, -7-00, & 9-45 p.m
Maximilian Schell &
Samantha Eggar
in
RETURN FROM THE ASHES
[Adults Only]

92-வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

# ச. ச. நிலையங்களின் உதைபந்தாட்ட சாம்பியன்கள் சுற்றுப் போட்டி

### அடுத்த மாதம் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாணத்தில் காரியாதிகாரிகள் பிரிவுகள்தோறும் நடைபெற்று முடிந்த சனசமூக நிலையங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டிகளில் சாம்பியன்களாக வந்த கோஷ்டிகளுக்கிடையேயான ஒரு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வவனியா மன்னார் ஆகிய வற்றின் காரியாதிகாரி பிரிவுகளின் சாம்பியன் உதைபந்தாட்டக் கோஷ்டிகளும் பங்குபற்றுகின்றன. இச்சுற்றுப் போட்டியில் சுமார் 12 காரியாதிகாரி பிரிவுகள் பங்குபற்றவுள்ளன. இச்சுற்றுப் போட்டிகள் அந்தந்தக்காரியாதிகாரி பிரிவுகள் தோறும் நடைபெறுமெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வி. நி.)

## மெய்வல்லுனர் போட்டிகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 27-ம் திகதி நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாகவும், சுமார் 34 பாடசாலைகள் கலந்துகொள்ளவிருப்பதாகவும் இம்முறை முதல் முறையாக நடைபெறவிருக்கும் உடுப்பிட்டி வட்டார ஆசிரியர்களுக்கிடையேயான மெய்வல்லுனர் போட்டியும் அன்றைய தினமே நடைபெறவிருப்பதாகவும் தெரிகிறது.

## பகிரங்க வேண்டுகோள்

கோப்பாய், ஞாயிறு

"இந்நாட்டிலே தற்போது நிலவிவரும் சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கி, அவற்றிற்கு நல்லமுறையில் தீர்வு காணவும், நமது மாண்புமிகு சமயத்தின் மறுமலர்ச்சிக்காக சேவையாற்றவும், வேற்று மதத்தவர்கள் தலையீடு, சட்டமூலம் கட்டுப்பாடு, பலாத்காரம் முதலியவற்றைத் தடுத்து பரஸ்பரம் சகல சமூகத்தவர்கள் மத்தியிலும் என்றும் நல்லெண்ணமும் அன்பும் நிலவ அஹிம்சையின் அடிப்படையிலே சமரசத் தீர்வுகாண முன்வருமாறு அகில இலங்கையிலுமுள்ள சமயத் தாபனங்கள், சைவப் பிரமுகர்கள், ஆலய முகாமையாளர்கள், இந்துசமயக் குருமார்கள் அனைவரையும் இம்மன்றம் பகிரங்கமாக வேண்டிக் கொள்கிறது" என்ற தீர்மானம் கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிரிக்கெட்

## கொக்குவில் இந்து வெற்றி

குரும்பசிட்டி, ஞாயிறு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிவிளையாட்டு மைதானத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற வருடாந்த கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி வீரர்கள் 99 மேலதிக ஓட்டங்களால் வெற்றியீட்டினர்.

கொக்குவில் இந்துக்கல்லூரியினர் தமது முதலாவது இன்னிங்ஸில் எல்லாவிக்கெட்டுகளையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றனர். இதையடுத்து துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா வீரர்கள் தமது சகலவிக்கெட்டுக்கள் நஷ்டத்திற்கு 171 ஓட்டங்களை எடுத்தனர். மறுபடியும் ஆட்டத்தில் ஈடுபட்ட இந்துக்கல்லூரி திறமையாக விளையாடி மேலும் 155 ஓட்டங்களை அடித்துக் கொண்டது. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வீரர்கள் எதிர்பாராதவிதத்தில் இரண்டாவது இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளை இழந்து 51 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தநிலையில் ஆட்டமிழந்தனர்.

## கிருஸ்கொப்பேஸ் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

அரியாலையின் 49வது சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தை ஒட்டி அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்ட 'நொக்வுட்' சுற்றுப்போட்டியில் கிருஸ்கொப்பேஸ் கோஷ்டிக்கும் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் கிருஸ்கொப்பேஸ் விளையாட்டுக் கழகம் ஒரு கோலால் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றது. இப் போட்டி அரியாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. (வி. நி.)


## பெற்றோர் சங்க நடவடிக்கை

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் நாவலர் பாடசாலையில் தற்போது நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மேற்படி பாடசாலைத் தலைமையாசிரியரும் பழைய மாணவர் சங்கமும் பெற்றோர் ஆசிரிய சங்கமும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| லிங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [ஹட்டன்] |



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)

# வரிவிளம்பரம்

## தேவை

**மருந்துச்சாலை:**
பங்குகள் வாங்க விரும்புவோர் அல்லது முழுவதையும் பொறுப்பேற்று நடத்த விரும்புவோர் தேவை.— சி. ரத்தினசபாபதி, "வசந்தா", தெல்லிப்பழை. 1961

கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனேச்சரும் விற்பனையாளரும் தேவை. மனேச்சர் 25—45 வயதுக்குட்பட்டவராய், கூட்டுறவுப்பயிற்சி பெற்றவராய், ரொக்கம் ரூபா 1000/- மும் ஆதனப் பிணை ரூபா 5000/- மும் கொடுக்கக்கூடியவராயும் இருக்கவேண்டும். வேதனம் ரூபா 100/- தொடக்கம் ரூபா 150/- வரை. விற்பனையாளருக்கு திறமைக்கேற்ற வேதனம் கொடுக்கப்படும். 2-4-68 க்கு முன் விண்ணப்பிக்கவும். சா. வீ. பொன்னையா, தலைவர், கரவெட்டி. 1633

**பொற்றொழிலாளர்:**
மலைநாட்டில் சிங்களவர் விரும்பி அணியும் காப்பு, மாலை, காப்பு, மோதிரம், அரைப்பவுணில், முழுப்பவுணில் மேல் வேலை செய்தல் போன்ற வேலைகளில் திறமை வாய்ந்தவர்கள் தேவை. இருப்பிட வசதியுண்டு. மாதம் தலா 500 ரூபாவுக்கு மேல் உழைக்கலாம். விரும்புவோர் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1635, C/o 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1635

## விற்பனைக்கு

**வீடுகள்:**
சங்கானை ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் ஆஸ்பத்திரி வீதியில் பயன்தரும் இளமரங்கள் நிறைந்ததும், நல்ல தண்ணீர் கிணறும் உள்ளதுமான 21 பரப்புக் காணியில் நவீன வசதிகளுடன்கூடிய மூன்று வீடுகள் விற்பனைக்குண்டு. வீடுகள் தனித்தனியாகவும் விற்கப்படும். தொடர்புகொள்ளவும். V. திருநாவுக்கரசு, C. T. B. டிப்போ, கொண்டாவில். 1959

**நெல்:**
மறவன்புலோ, பூநகரி கறுப்பன் நெல்லு எம்மிடம் விற்பனைக்குண்டு. நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்சிஸ் லிமிட்டெட், 20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1934

## விக்ரோறியா வென்றது

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டைத் தொகுதி வட்டாரப் பாடசாலைகளின் பதின்மூன்று வயதுக்குட்பட்ட மாணவ மாணவிகளின் விளையாட்டுப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியினர் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டனர். போட்டிகள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

அறிவித்தல்
TWYFORDS
எம்மிடம் இறக்குமதியான ருவைபோட்ஸ் கக்கூஸ் கல்லு (Twyfords Squattingpan) மிகவும் நிதானமான விலைக்குவிற்பனைக்குண்டு.
நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்சிஸ் லிமிட்டெட்
20, ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம்.

## அத்தனுசியார் ஞாபக வைத்திய நிலையம்

மாதகல் வீதி, பண்டத்தரிப்பு

சில்லாலையில் வைத்திய சேவை செய்துவந்த சுதேச வைத்தியர் அத்தனுசியார் அவர்கள் சமீபத்தில் மறைந்தாலும் அவருடைய அபூர்வமான வைத்திய முறைகள் மறைந்துவிடவில்லை.

அவருடைய இளைய புதல்வன்
சித்தவைத்தியகலாநிதி அல்போன்ஸ்
அத்தனுசியார் அவர்கள்
பண்டத்தரிப்பில் நடாத்தும்
வைத்திய நிலையத்தில்
தந்தையாருடைய வைத்திய மரபைத்தொடர்ந்து பாதுகாத்து வருகிறார்.
இவ்விடத்தில் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதோடு

O செந்தூரங்கள் O இலேகியங்கள் O சூரணங்கள்
O பஸ்பங்கள் O தைலங்கள் O குளிகைகள்

முதலிய எல்லாவித மருந்துகளையும் ஆலோசனையின் பின்பு பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இவர்
மேல்நாட்டில், கர்ப்ப ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்குமான ரோகங்களுக்குரிய சிகிச்சையில் விசேட பயிற்சியும் பெற்றிருக்கிறார்.
இவ்விடத்தில் ஆங்கில வைத்தியர் ஒருவரும் துணையாயிருந்து வைத்திய சேவை செய்வார்.
புண்களுக்கும் வைத்தியம் செய்யப்படும்.

வைத்தியசேவை இரவும்பகலும் தொடர்ந்து நடைபெறும்.

505

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் எதிரி அலவாங்கினால் கணவர் மீது ஓங்கி அடித்தார்

## அச்சுவேலி கொலை வழக்கில் இறந்தவரின் மனைவி சாட்சியம்

குரும்பசிட்டி, ஞாயிறு
''தமது லொறியில் வாழைக்குலை ஏற்றி நீர்கொழும்புக்குச் சென்ற எனது கணவர் சம்பவ தினத்தன்று மாலை 3 மணியளவில் வீடு திரும்பினார். லொறி பின்னர் எனது சகோதரி பரமேஸ்வரி வீட்டில் விடப்பட்டது. தேநீர் அருந்தியதன்பின் கணவர் வருமதியான கடன் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பலாலிக்குச் சென்றிருந்தார். இரவு 9-45 மணியளவில் கணவன் வீடு திரும்பி வந்தபோது நான் விழித்திருந்தேன். அந்நேரம் என்னையும் அழைத்துக்கொண்டு லொறியைப் பார்ப்பதற்கு பரமேஸ்வரி வீட்டிற்குஅவர் போனார். போகும்போது ஒழுங்கையில் உரத்த குரலில் என்னுடன் பேசிக்கொண்டு வந்தார்.''

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் அச்சுவேலி கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இறந்தவரின் மனைவி வள்ளியம்மா சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

சாட்சி மேலும் கூறியதாவது:—

ஒழுங்கையில் செல்லுகையில் தமது வளவிலிருந்து முதல்எதிரி எம்மை நோக்கி வந்துகொண்டிருந்தார். இவரைத் தொடர்ந்து இரண்டாம் எதிரியும் வந்தார். முதல் எதிரி அலவாங்கும், 2-ம்எதிரி பொல்லும் அப்போது தம் கைகளில் வைத்திருந்தனர். நித்திரைகொள்ள விடமாட்டாயா?'' எனமுதல் எதிரி என்கணவரிடம் கேட்டார். ''நான் மனைவியுடன் பேசுகிறேனே தவிர உங்களுடன் பேசவில்லையென எதிரிகளைப்பார்த்து மேலும் என் கணவன் தெரிவித்தார். இந்நேரம் இரண்டாம் எதிரி கணவனின் இடதுபுற முழங்காலில் பொல்லால் அடித்தார். உடனே கணவன் கீழே நிலத்தில் விழுந்துவிட்டார். பின் முதல் எதிரி மூன்று நான்கு தடவைகள் அலவாங்கினால் ஓங்கி இறந்தவரின் தலையில் அடித்தார்.

இதையடுத்து அவ்விடத்தைவிட்டு இருவரும் ஓடிவிட்டனர். நான் குழறிச் சத்தமிட்டபோதும் ஒருவரும் அவ்விடம் வரவில்லை. கணவர் இறந்துவிட்டார் என அந்நேரம் அறிந்தேன். குழறியவாறு காருக்குச் சென்றபோது வழியில் சிவனடியார் என்பவர் வந்தார். சம்பவத்தை அவரிடம் கூறி கார்பிடித்து பொலிஸாருக்கு தெரிவிக்கும்படி அறிவித்தேன்.

அச்சுவேலி வரணியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை இராசநாயகம் என்பவரை இவ்வருடம்பெப்ரவரிமாதம் 27-ம் திகதி கொலைசெய்ததாக இரு சகோதரர்களான எஸ். சோமசுந்தரம், எஸ். விசாகரத்தினம் ஆகியஇருவருக்கும் எதிராக காங்கேசன்துறைப் பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

மேல்விசாரணையை அடுத்தமாதம் 2-ந் திகதிக்கு ஒத்திவைத்தநீதிபதி எதிரிகளைத்தொடர்ந்து ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் அட்வகேட் என். சிவஞானசுந்தரம் புறடர் பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

ஒழுங்கை நிலைநாட்ட முயன்ற

# மாணவர் தலைவர் மீது வழிப்பறி புகார்?

யாழ்ப்பாணம், திங்கள்
கல்லூரி வளவுக்குள் சைக்கிள் ஓட முயன்ற ஒருவரை தடுத்த மாணவர் தலைவர் ஒருவர் மீது வழிப்பறிக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாம். இச்சம்பவம் தெல்லிப்பளையில் நடைபெற்றுள்ளது.

இதுவிஷயமாக சம்பந்தப்பட்டகல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் கல்விப்பகுதி மேலதிகாரிகளுக்கும் பொலிஸ் மேலதிகாரிகளுக்கும்புகார்கள்தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

சம்பந்தப்பட்டவர் பாடசாலை வளவுக்குள் பாடசாலை நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் சைக்கிள் ஓட முயன்றபோது பாடசாலை ஒழுங்குமுறைகளை மீறுவதாக மாணவர் தலைவர் தடுத்ததாகவும் அதை மீறி ஓட முயலுகையில் சைக்கிளைப் பிடித்தபோது அவர் சைக்கிளை வளவுக்குள் விடுத்துச் சென்று தமது சைக்கிள் வழிப்பறிசெய்யப்பட்டதாகப் புகார்செய்திருக்கிறாரென்றும் அதைத் தொடர்ந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் மாணவர் தலைவருடன் அதிபர் அனுமதியின்றிப் பாடசாலை வளவுக்குள் கடுமையாக நடந்துகொள்ளமுயன்றதாகவும், ஆசிரியர்கள் தலையிட்டுத் தடுத்ததாகவும் புகார் கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆசிரியர்கள் முடிவு செய்திருப்பதாக தெரிகின்றது.

## காந்தி நூற்றாண்டு விழா ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், திங்கள்
அடுத்த ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் காந்தி நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று இம்மாதம் 27-ம் திகதி யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

காந்தி நிலையத்தின் ஆதரவில் முதலியார் செ. சின்னத்தம்பிதலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்திற்கு சகலரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

[கா. நி]

## கடைசி நேரத்...

1-ம் பக்கத்தொடர்ச்சி

விற்கு அதிகமான ஏற்பாடுகள் செய்யாதிருந்தபோதிலும் விமரிசையாக திருவிழா நடைபெற்றது.

தமிழ் நாட்டிலிருந்து வந்த சுமார் 1,500 பேர்களை முதலில் இராமேஸ்வரத்தில் சுங்க அதிகாரிகள் தடுத்து நிறுத்தியபோதிலும் பின் அவர்கள் இங்கு வர அனுமதிக்கப்பட்டனர். இச் செய்தி தமிழ்நாட்டில் பரவியதும் அணி அணியாக ஆயிரக்கணக்கானோர் தமிழ்நாட்டிலிருந்து இங்கு வரத் தொடங்கினர். நேற்று நண்பகல் வரை இவர்கள் வந்துகொண்டிருந்தனர்.

### ராமநாதபுரம் ராஜாவின் செயலாளர்

தமிழ்நாட்டிலிருந்து கச்சதீவுக்கு வர பலர் அனுமதி கேட்டிருந்தனர். இராமநாதபுரம் ராஜாவின் செயலாளர் திரு. கணபதியும், ஒரு பத்திரிகை நிருபரும் விசைப்படகில் இங்கு வர முதலில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

'இலங்கையிலிருந்து யார் வேண்டுமானாலும் கச்சதீவிற்கு போகலாமென்று அரசாங்கம் அனுமதித்துவிட்டதாகவும், கள்ளக்கடத்தல் நடைபெறுது தடுக்கவே இவ்வளவு கட்டுப்பாடுகளும் என்று இலங்கை ரகசியப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

### கூடாரங்கள்

இங்கு புதர்களிலும் செடிகள் அருகேயும் ஏராளமான கூடாரங்கள் அமைத்து தங்கியிருக்கிறார்கள். தீவு முழுவதும் கூடாரங்கள் நிறைந்து காட்சியளிக்கின்றன.

இலங்கையிலிருந்து குறிப்பாக தென்மாகாணத்திலிருந்து சிங்கள மக்களும் இங்கு வந்திருந்தனர் தமிழ்நாட்டிலிருந்து வந்தவர்களும் இலங்கையிலிருந்து வந்தவர்களும் அருகருகே கூடாரங்கள் அமைத்து அன்போடு பழகினார்கள்

இலங்கையிலிருந்து சிலர் குடிநீர் கொண்டுவந்தனர். பலகாரக்கடைகளும் போடப்பட்டிருந்தன. சிலர் குளிர்பானங்களையும்கொண்டுவந்திருந்தனர்.

கொழும்பு துறைமுகத் தொழிலாளர்களும் தங்கள் குடும்பத்தவர்களுடன்இங்கு வந்திருந்தனர்.

நேற்றிரவு நடந்த திருச்சொரூப ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். இலங்கையர் இந்தியர் என்ற பாகுபாடின்றி ஊர்வலத்தில் ஒன்றுகவே கலந்துகொண்டனர்.

இலங்கை விமானப்படையைச் சேர்ந்த இருவிமானங்கள் மிகத் தாழ்வாக அடிக்கடி பறந்துகொண்டிருந்தது. இலங்கையிலிருந்து வந்தவர்கள் தேங்காய் எண்ணெய் கொண்டுவந்தார்கள். சாராயப்போத்தல்கள், நெல்லிகிரஷ், குளிர்பானங்களையும் கொண்டு வந்தனர்.

இத் தடவை மதுபானம் அதிகமாக விற்பனைசெய்யப்பட்டதாக வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

### பத்திரிகைகள்

இலங்கையில் தடைசெய்யப்பட்ட பத்திரிகைகள்சில இங்குவிற்பனையாகிக்கொண்டிருந்தன. தென்னிந்திய சினிமா நட்சத்திரங்களான சிவாஜி, எம். ஜி. ஆர், ஜெயலலிதா, ஜோதிலக்ஷ்மி, விஜயநிர்மலா ஆகியோரது கவர்ச்சிப்படங்களும் விற்பனையாகிக் கொண்டிருந்தன.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாண நகரமத்தியில் கண்டெடுக்கப்பட்ட கூப்பன் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் திரு. எம். அபுசாலியால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில்வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## செம்பியன்பற்று கி. ச. தேர்தலில் போட்டியிடுபவர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்
செம்பியன்பற்றுக் கிராம சபைத்தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப்பத்திரங்கள் திரு. வேலாயுதம் முன்னிலையில் தாக்கல்செய்யப்பட்டன.

போட்டியிடுபவர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

1-ம் வட்டாரம்: திருவாளர்கள் செல்லையா ஐயாத்துரை, செல்லையா நடராஜா.

2-ம் வட்டாரம்: திருவாளர்கள் தேவசகாயம் வரப்பிரகாசம்.

3-ம் வட்டாரம்: திரு. பஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை [போட்டியின்றித் தெரிவு].

4-ம் வட்டாரம்: திருவாளர்கள் வைரவப்பிள்ளை சுப்பிரமணியம், சின்னக்குட்டி முத்தையா.

5-ம் வட்டாரம்: திருவாளர்கள்: வைரவப்பிள்ளை, செகராசா, வடிவேலு சின்னத்தம்பி.

6-ம் வட்டாரம்: திருவாளர்கள்: வேலுப்பிள்ளை சின்னத்துரை, வேலுப்பிள்ளை செல்லத்துரை, வல்லியர் சின்னையா.

7-ம் வட்டாரம்: திருவாளர்கள் முருகப்பர் சுப்பிரமணியம், ஆழ்வாப்பிள்ளை சின்னையா.

8-ம் வட்டாரம்: திரு. வேலுப்பிள்ளை சடாசிவம் [போட்டியின்றித்தெரிவு].

9-ம் வட்டாரம்- திருவாளர்கள் ஐ. ஜே. ஐயம்பிள்ளை, சின்னத்தமபி முத்தையா.

10-ம் வட்டாரம்; திரு. செல்லத்தம்பி வேலுப்பிள்ளை [போட்டியின்றித் தெரிவு].

11-ம் வட்டாரம்: திருவாளர்கள் கே. எஸ். வேலுப்பிள்ளை, சின்னத்தம்பி சின்னப்பு, சின்னையா குலசேகரம், சுப்பையா சண்முகம், இராசரத்தினம் நற்குணம். [கா. நி.]

## பொது நேரசூசிகை வேண்டும்

யாழ்ப்பாணம், திங்கள்
தற்பொழுது நீண்ட தூர பஸ்சேவைகளுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கும் நேரசூசிகையொன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாதை இலக்கங்கள் அனைத்துக்குமாகிய ஒரு நேர சூசிகை பொதுமக்கள் பார்க்கக்கூடியதாக அமைப்பதோடு பிரயாணிகள் அதிகமாகப் பிரயாணம் செய்யும் காலையிலும் மாலையிலும் அதிக பஸ்களைச்சேவைக்கு விடவேண்டும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட மகஜரொன்றை இருப்பிட்டி பஸ் பிரயாணிகள் சங்கம் யாழ் மாவட்ட பஸ் பிரயாணிகள் சீர்கேடு ஆராயும் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஆறு பிரேரணைகள் கொண்ட இம்மகஜரில் புகையிரத பிரயாணிகள் நலனுக்காக விசேஷ பஸ்களை சேவைக்கு விடவேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது. [கா. நி]

## மாவட்ட.........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யிருப்பவர்கள் ஆகியோருக்கும், உயர்தர அரசாங்க அதிகாரிகள், அவர்களது மனைவிமார், அவர்களுடன் தங்கியிருப்பவர்கள் ஆகியோருக்கும் விசேஷ காணிக்குத்தகைச் சபை காணிகள் வழங்கக்கூடாதென்று அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக திரு. சி. பி. டி' சில்வா கூறினார்.

ஏற்கனவே வழங்கப்பட்ட காணிகளில் முதலீடுசெய்து விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருந்தால் அவைகள் அனுமதிக்கப்படுமென்றும் மந்திரி தெரிவித்தார்.

## ஹோர்லிக்ஸ் விற்க மறுத்தார்களாம்

யாழ்ப்பாணம், திங்கள்
கடையில் 'ஹோர்லிக்ஸ்' வைத்திருந்தும் விற்பனை செய்ய மறுத்த இரு வர்த்தகர்களை உணவுக்கட்டுப்பாட்டிலாகாவினர் கைதுசெய்தனர் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச்சேர்ந்த இவ்வர்த்தகர்மீது வழக்கு தாக்கல் செய்யப்படவிருக்கின்றது. (கா. நி)

## விளையாட்டில் ஊக்கம்

### விவசாயப்படை முகாம்களில்

யாழ்ப்பாணம், திங்கள்
வடபகுதியில் விசுவமடுவிலும், ஒட்டிசுட்டானிலும் உருவாக்கப்பட்ட விவசாயப்படை முகாம்களில் விளையாட்டுக்கும் உடற்பயிற்சிக்கும் முகாம் அதிகாரிகள் முக்கிய இடம்கொடுத்துள்ளதாக அறியப்படுகிறது. பைலா நடனத்துக்கும் இசை நிகழ்ச்சிகளுக்கும் ஊக்கமும் ஆக்கமும் காட்டும் அதிகாரிகள் விளையாட்டு உபகரணங்களையும் இசைக்கருவிகளையும் தாராளமாக வாங்கிக்கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

விசுவமடு முகாமிலுள்ள விவசாயப்படை வீரர்கள் இப்பொழுது கரபந்தாட்டப் பயிற்சியில் இறங்கியுள்ளனர். மேலும் இம்முகாம்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டு வீரர்கள் குருநாகலில் நடைபெறவிருக்கும் விவசாயப்படையின் விளையாட்டுவிழாவில் கலந்து கொள்வார்களென அறியப்படுகிறது. [வி. நி]

## சுப்ரீம்கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

குரும்பசிட்டி, ஞாயிறு
மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஏழாலை கொலை முயற்சி வழக்கு விசாரணை முடிவில் உயர்நீதிமன்ற விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிசார் ஏழாலை வாசியான எஸ். வலம்பிராஸ் என்பவரை கத்தியால் வெட்டிக் கொலை செய்ய எத்தனித்ததாக கே. செல்லையா என்பவர் மீது குற்றஞ்சாட்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

சுன்னாகம் பொலிசாரின் உதவியுடன் வழக்கறிஞர் சிவ. சிறீதரன் வழக்கை நடாத்தினார்.

## இளைஞர் கழகம் வெற்றி

உடுப்பிட்டி, ஞாயிறு
கரணவாய் தெற்கு இளைஞர் கழகத்துக்கும், வல்வெட்டித்துறை புளூஸ் கழகத்திற்குமிடையே வேவில் பிள்ளையார் கோவில் மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் கரணவாய் தெற்கு இளைஞர் கழகம் இன்னிங்கும் 54ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org